# இரண்டு முகக் கவசங்கள் உங்களை எவ்வாறு COVID-19 தொற்றிலிருந்து பாதுகாக்கின்றன

சமூக தகவல் வழங்குவோர்:

fairfirst INSURANCE
A FAIRFAX Company

COVID-19 தொற்றுப் பரவல் அதிகரிப்புடன், இரண்டு முகக் கவசங்களை அணியுமாறு சுகாதார நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர். இது double masking என அறியப்படுகின்றது.

நோய் கட்டுப்படுத்தல் மற்றும் தவிர்ப்புக்கான ஐக்கிய அமெரிக்க நிலையத்தினால் (CDC) வெளியிடப்பட்டுள்ள ஆய்வு அறிக்கையில், மருத்துவ முகக் கவசம் ஒன்றுக்கு மேலாக துணியினாலான முகக் கவசத்தை அணிவது என்பது, கொரோனா வைரஸை பரப்பும் காற்றில் கலந்திருக்கும் துணிக்கைகளுக்கு வெளிப்படுத்தப்படுவதை குறைக்கும் ஒரு வழிமுறை என குறிப்பிடப்பட்டுள்ளது.



## அதிகளவு பாதுகாப்பை உறுதி செய்யும் இரு முகக் கவசங்கள் தொடர்பான சில குறிப்புகள் வருமாறு:

- ஒரு முகக் கவசம் சத்திரசிகிச்சையின் போது அணியும் முகக் கவசமாகவும், மற்றையது துணியினாலான முகக் கவசமாகவும் இருத்தல். ஒரே வகையான இரு முகக் கவசங்களை அணிவது (இரு சத்திரசிகிச்சை முகக்கவசம் அல்லது இரு துணியினாலான முகக்கவசம்) பயனுள்ளதாக அமையாது.
- நீங்கள் N-95 முகக் கவசத்தை அணிந்திருப்பின், இந்த இரட்டை முகக் கவசங்களை பயன்படுத்துவது அவசியமற்றது.
- துணியினாலான முகக் கவசத்தை, சத்திரசிகிச்சைக்கான முகக் கவசத்தின் மீது அணிய வேண்டும் என்பதுடன், சௌகரியமாக மூச்செடுக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
- சிறுவர்களுக்கு இரட்டை முகக் கவசம் அணிவது பரிந்துரைக்கப்படவில்லை.

**எனவே, பொதுப் போக்குவரத்து அல்லது அதிகளவானோர் காணப்படும் பகுதிக்கு நீங்கள் செல்லும் போது இயலுமானவரை இரட்டை முகக் கவசங்களை அணியுமாறு நாம் உங்களை ஊக்குவிக்கின்றோம்.**

---

மறுதலிப்பு: இந்த ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள் உங்களையும், உங்கள் அன்புக்குரியவர்களையும் COVID-19 தொற்றிலிருந்து பாதுகாக்கும் வகையில் அமைந்துள்ளன. இந்த ஆவணத்தில் காணப்படும் ஏதேனும் விடயம் தொடர்பில் உங்களுக்கு மேலதிக தெளிவுபடுத்தல் அவசியமாயின் அல்லது இந்த ஆவணத்தின் பிரகாரம் செயலாற்றுவதற்கு மேலதிக தகவல்கள் அவசியமாயின், நிபுணத்துவ ஆலோசனையை நாடுமாறு நாம் பரிந்துரைக்கின்றோம்.

**ஃபெயார்ஃபஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடெட்**

ஹொட்லைன்: 0112 428 428 | இணையத்தளம்: www.fairfirst.lk